**செய்தி வெளியீடு எண்:360** **நாள்:15.6.07**

ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்து கண்காணித்திட அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவின் இரண்டாம் கூட்டம் – 15.6.2007

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களின் நிறைவேற்றத்தை கண்காணித்து ஆய்வு செய்திட அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான கண்காணிப்பு குழுவின் இரண்டாவது கூட்டம் இன்று (15.6.2007) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.பெல்லார்மின், திரு.அப்பாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ.க.மணி, திரு.எம்.அப்பாவு திரு.வை.சிவபுண்ணியம், திரு.வீ.மாரிமுத்து அகியோர் கலந்து கொண்டனர்.

திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திரு.அலாவுதீன், இ.ஆ.ப., செயலர், நெடுஞ்சாலைத் துறை, திரு.சந்திரமௌலி, இ.ஆ.ப., செயலர் (பொறுப்பு), திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, திருமதி.கிரிஜா வைத்தியநாதன், உறுப்பினர் செயலர், மாநில திட்டக் குழு, திரு.நவ்நீத், இ.ஆ.ப., சிறப்பு செயலர், நிதித் துறை, திரு.ககன்தீப்

சிங் பேடி, இ.ஆ.ப., இயக்குநர், ஊரக வளர்ச்சித் தறை, திருமதி.மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., திரு.ஜதிந்திரநாத் ஸ்வய்ன், இ.ஆ.ப., திரு.தியாகராஜன், இ.ஆ.ப., திரு.முத்துசாமி, இ.ஆ.ப., திரு.சிவசங்கரன், இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த 31.12.2006 அன்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரத்தை செயலர் ஊரக வளர்ச்சி அவர்கள் விளக்கினார். இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம், தேசிய வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், பிரம மந்திரி கிராம சாலை திட்டம், முழு சுகாதார திட்டம் ஆகிய திட்டங்களின் நிதிப் பயன்பாடு , பணிகள் நிறைவேற்ற நிலை குறித்து தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டது.

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தை தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்துகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் நிர்ணயிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும்

மத்தியஅரசை கேட்டுக் கொள்ள ஏகமனதாக இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் முந்தைய அரசால் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 5.6.2007 வரை ரூபாய் 280 கோடி செலவிடப்பட்டு 3548 பணிகள் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் கிராமப்புற பகுதிகளில் மொத்தம் 3 கோடியே 45 லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும், குறைந்தபட்ச ஊதியமாக ரூபாய் 80 வழங்கிட தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கென தனியாக விலைப் பட்டியல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்பதும் இக்கூட்டத்தில் பாராட்டப்பட்டது.

திரு.கோ.க.மணி அவர்கள் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்காக மாவட்டங்களை தேர்வு செய்யும் போது மாநில அரசின் கருத்தினை மத்திய அரசு பெற்று தேர்வு செய்திட வேண்டும் என்று தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை பொறுத்து கூடுதலாக பணிகளை சேர்த்திட அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்திட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுவித்தார். எனினும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் சில பகுதிகளில் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக் குறை ஏற்படுகிறது என்பதையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட கூடுதலாக ஏற்பாடுகள் தேவைப்படுகிறது என்றும், இதற்கென தனியாக செயல் திட்டம் வகுக்கப்பட்டு அதன்படி “சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்கள் விற்பனை விழா”க்கள் தற்போது தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைப் பணிகளின் தரம் தேசிய கண்காணிப்பு குழுவினரால் பாராட்டப்பட்டுள்ளதாக இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை தெரிவித்தார். முழு சுகாதார இயக்கத்தின் மூலம் கட்டப்படும் தனிநபர்இல்ல கழிப்பறைகளுக்கான மதிப்பீடு தற்போது 1500 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கழிப்பறைகள் மேலும் தரமாக

கட்டப்படுவதற்கு இதனை குறைந்தபட்சம் 5000 ரூபாயாக மாற்ற கேட்டுக் கொள்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்ட பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. அப்பாத்துரை அவர்கள் தெரிவித்தார். பணிகளின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது என்று ஒரு மனதாக கருத்து தெரிவிக்கப்பட்டது. அனைத்து வளர்ச்சிப் பணிகளின் நிறைவேற்றமும் முழுமையாக கண்காணிக்கப்படுவதாகவும், அளவீடுகள் செய்யப்பட்டு, புகைப்படங்கள் எடுக்கப்பட்டு திட்டப் பணிகளின் நிறைவேற்றம் உரிய முறையில் கண்காணிக்கப்படுவதாக செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தெரிவித்தார்.

வெளியீடு:இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை-9.